ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
ஆடி

AUGUST
1971

★ ★




தொகுதி 33
பகுதி 8

Vol. 33
No. 8

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் T. S. ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscriptio
Rs. 5/-

★ ★

| | | |
|---|---|---|
| வரவேற்கிறோம் | ... | 141 |
| ஆரோக்கிய கல்பத்துருமம் | ... | 143 |
| சில அனுபவ முறைகள் | ... | 150 |

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
**ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.**

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

( ஸ்தாபிதம் 1939 )

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202.

---

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

∴

### 101 ஆவர்த்தித க்ஷீரபலா தைலம்

(200 மி.கி. காப்ஸ்யூல்)

| 200 | 100 | 50 |
|---|---|---|
| ரூ. 10-00 | ரூ. 5-25 | ரூ. 2-75 |

பாக்கிங், தபால் செலவு தனி.

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின்
மேற்பார்வையில் தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

**வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்**
**— மிகவும் நம்பிக்கையான இடம் —**

T. S. ஈச்வரன், L.I.M.
*மானேஜிங் டைரெக்டர்.*

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

**M/s. KALIA BROTHERS (Regd)**

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** — **Phone: Office - 3232**
**Resi - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]**

**கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,**

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

**தந்தி: KALIA** — **போன்: ஆபீஸ் - 3232**
**வீடு - 4343**

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

**தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18**

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

— எங்களுடைய கிளைகள் : —

1. 23 B, பூஸா ரோடு, புது டில்லி : போன் ; 585687
2. மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 ,, 2084
3. கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 ,, 85752
4. வளிஞ்ஞம்பலம், எர்ணகுளம், கொச்சின்-18 ,, 32219
5. பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 ,, 92
6. மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 ,, 195
7. கடைவீதி, பொன்னானி ,, 41
8. ரௌண்ட் வெஸ்டு திருச்சூர்-1 ,, 378
9. கோர்ட் ரோடு, ஆலத்தூர் ,, 87
10. மெயின் ரோடு, கஞ்சிக்கோடு
11. ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18,, 33758
12. இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 ,, 4891
13. 229 ராஜவீதி, கோயமுத்தூர்-1 ,, 33988
14. T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2
15. No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)

**பாக்டரி :**
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

**நர்ஸிங்ஹோம் :**
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

---

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

**ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்**
**பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.**

## வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS ETC.

*Please Contact :*

# PURI BROTHERS (REGD.)

**MUSK MERCHANTS**

**JULLUNDUR-1**

Grams : "VENKATESH" Phone : 3923




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 33 | விரோதிகிருது ஆடி | பகுதி 8 |
| Vol. 33 | 1971 ஆகஸ்ட் | No. 8 |


॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।

यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நம: சிவகுமாராய.

## வரவேற்கிறோம்

கண் காது மூக்கு முதலான அறிவைத்தரும் புலன்கள் கழுத்திற்கு மேற்பட்ட பாகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அதனால்தான் தலைக்கு அதிக முக்யத்துவம் ''ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிர : பிரதானம்'' என்பது முது மொழி.

தலை இல்லாமல் உயிரினம் வாழமுடியாது. ஆகையால்தான் ஒரு மனிதனுக்கு தலைபோல், தேசத்திற்கும் தலைநகரம் இடப் பட்டுள்ளது. அறிவிற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் தலைநகரத்திலிருந்து பிரகாசிப்பது போல் மற்ற இடங்களில் விளங்க முடியாது. தமிழ் நாட்டிற்குத் தலைநகரான சென்னையில் எல்லா விதமான கல்வி ஸ்தாபனங்களும் ஒரு காலத்தில் அமைந்து இருந்தன. ஏன்? தமிழ் நாட்டிற்கு மட்டுமா என்ன? கேரளம்

கர்னுடகம், ஆந்திரம் இவைகளுக்கும் கூட நமது சென்னை தலை நகராக விளங்கி முக்ய கல்வி ஸ்தாபனங்களை உடையதாக இருந்து வந்தது. ஆயுர்வேதம் பயில கேரளம் ஆந்திரம் இவற்றிலிருந்து ஏராளமான மாணவர்கள் சென்னையில் வந்து குவிந்தனர். காலம் சென்ற டாக்டர் G. ஸ்ரீனிவாஸ மூர்த்தி அவர்கள் இந்திய வைத்யத்திற்கு வேண்டிய சேவை செய்து சென்னை நகரில் அடையாறு ஆலமரம் போல் பெரியதாக வளர்த்தார்கள். ஆனால் காங்கிரஸ்காரர் ஆட்சி காலத்தில் அதிலும் திரு. மாணிக்க வேலனர் காலத்தில் அவர் மந்திரியாக இருந்த போது அந்தப்பள்ளிக்கூடம் ஸ்தாபகருடைய நோக்கத்திற்கு விரோதமாக ஆங்கில வைத்யக்கலாசாலையாக மாற்றப்பட்டது. இவை எல்லாம் பழய கதை.

எவ்வளவோ எடுத்துக்கூறியும் இதைப்பற்றி காங்கிரஸ் ஆட்சியில் புரைலோசனை செய்யவில்லை. தென்னுட்டின் ஒரு மூலையில் அதாவது பாளையங்கோட்டையில் ஒரு கலாசாலையை ஏற்படுத்தினர்கள். அதுவும் நன்ருக வளர்க்கப்படவில்லை. மாற்ருந்தாயின் குழந்தையின் முறையில்தான் பராமரிக்கப்பட்டு வந்தது. படிப்பிற்குத் தேவையான புத்தகங்கள் பிரத்யட்சமான அறிவை வளர்க்கும் பாடதிட்டங்கள் ஒன்றும் இன்று வரையில் சரியாக வளர்க்க முடியவில்லை. ஆயுர்வேதம் யூனனி இவைகளில் மாணவர்கள் கிடையாது இந்த மாதிரியாக நடந்துவருகிறது இந்த சமயத்தில் நமது கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு நல்ல செய்தி வெளிவந்துள்ளது. அதாவது சென்னை நகரிலேயே இந்திய முறைகளுக்காக ஒரு வைத்யக் கல்லூரி ஆரம்பிக்கப்போவதாக கூறியுள்ளதே. இது பழம் நழுவி பாலில் விழுந்தமாதிரி வரவேற்கப்படவேண்டிய விஷயமாகும் இம் மாதிரி அரசாங்கத்திற்குத் தோன்றியுள்ளது இந்திய வைத்தியத்தின் வருங்காலத்தின் நல்ல அறிகுறியாகும். இது சீக்ரமாக நிறைவேறி பள்ளிக்கூடம் நல்ல நிலையில் நடந்து பார்க்க ஆவல் கொண்டுள்ளோம்.

தவிர ஆயுர்வேதம் யூனனி துறைகளுக்கு தமிழ் நாட்டில் சம்ஸ்கிருதம் அரபி படித்தவர்கள் இல்லாததால் நடத்தமுடியவில்லை என்பது உண்மையே. கேரளா, கர்னுடகம், ஆந்திரா முதலான மாநிலங்களில் தற்போது பள்ளிகளில் சம்ஸ்கிருதம் பயில பூரண வசதி செய்து கொடுத்துள்ளார்கள். அதேமாதிரி தமிழ்நாட்டிலும் இஷ்டப்படுகின்றவர்களுக்கு சம்ஸ்கிருதம் பயில வசதிசெய்து தருவது அரசாங்கத்தின் தர்மமாகும்.

நிற்க பாளையங்கோட்டை முனிசிபாலிடி அங்கு தற்சமயம் நடக்கும் இந்திய வைத்தியப்பள்ளியை சென்னைக்கு மாற்றக் கூடாது என்று தீர்மானம் நிறைவேறியுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்தத் தீர்மானத்தை நாம் மிகவும் ஆமோதிக்க வேண்டியுள்ளது இன்னும் பல பள்ளிகள் ஏற்படுத்தினலும் போதாது என்ற நிலையில், இருக்கும் ஒரு பள்ளியையும் சென்னைக்கு மாற்றிவைத்து சென்னைக்கு புதியதாக பள்ளி வேண்டாம் என்பது சர்க்காரின் உத்தேசமாக இருப்பின் அது அதிகமாக வரவேற்கத்தக்க விஷயமாக இல்லை. பாளையங் கோட்டை பள்ளியைத்தவிர சென்னையிலும் ஓர் இந்திய வைத்யப் பள்ளியை ஆரம்பித்து நடத்துவதுதான் நமது சர்க்காரின் உத்தேசம் என நாம் கருதுகிருேம். சிவம்!

---

# ஆரோக்கிய கல்பத்துருமம்

---

## மூத்ராகாதத்தில்

நீர்ச்சுருக்கு நீரடைப்பு ரோகங்களுக்கு மூத்ராகாதம் எனப் பொதுப்பெயர். இந்நோய் பலவகைப்படும். பொதுவான சிகித்ஸை இங்கு கொடுக்கப்படுகின்றது.

நெய்யும் நல்லெண்ணெயும் சம அளவில் கூட்டி இளம் சூடாக்கி வஸ்திப் பிரதேசத்தில் பிழிச்சல் செய்யலாம்.

பூசணிக்கொடியைக் கஷாயமிட்டு ஏலரிசித்தூள் மேம் பொடி சேர்த்துக் கொடுக்க உடன் நீரடைப்பு விலகும்.

நெரிஞ்சில், முள்ளுக்கத்திரி, திராக்ஷை, வால்மிளகு இவை களைக் கஷாயமிட்டு சர்க்கரையோ ஜீரகத்தூளோ மேம் பொடி சேர்த்துச் சாப்பிடலாம்.

மூவிலைவேர் ஒருபங்கு, ஓரிலைவேர் 2 பங்கு, முள்ளுக்கத்திரி வேர் 3 பங்கு, நெரிஞ்சில்முள் 6 பங்கு வேருடன் இவைகளைக் கஷாயமிட்டும் கொடுக்கலாம். ஓரிலைவேர், மூவிலைவேர், அல்லது முள்ளுக்கத்திரிவேர் இவை வகைக்கு ஒரு பங்கும், நெரிஞ்சில்முள் வேருடன் 2 பங்கும் சேர்த்தும் கஷாயமிடலாம் இரண்டிற்கும் சர்க்கரைபோடவும், அல்லது இவைகளைப் பால் கஷாயமாக்கியும் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

தேத்தான் வேரையோ விதையையோ குளிர்ந்த ஜலத்தில் அரைத்துக் கலக்கியும் கொடுக்கலாம். முதியார் கூந்தல் வேரை அரைத்து இளநீரில் குழப்பிச் சாப்பிடலாம். நெரிஞ்சிலேயோ, தாமரைக்கிழங்கையோ இளநீரில் கலக்கி சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

வெள்ளரிவிதை, அதிமதுரம், தேத்தான்கொட்டை, எலிப் புழுக்கை இவைகளை ஜலம் விட்டரைத்து, அடிவயிற்றில் பூச நீர்க்கட்டு விலகும்.

## கோக்ஷுராதி குடிகை

நெரிஞ்சில்முள், கல்நார், வெள்ளரிவிதை, ஓரிலைத்தாமரை, ஈச்சம்வேர், திராக்ஷைப்பழம், தேத்தான்வித்து, கருநொச்சிவேர், பச்சைக் கர்பூரம், ஏலரிசி, குங்குமப்பூ, கூகைநீர், தார்தாவல் வேர், மரமஞ்சள் தோல், காவிஜபான், அரேணுகம், சிற்றேலம், திப்பிலி, சிலாஜத்து ஸஹஸ்ரவேதி, கடுக்காய்தோல், தானிக்காய் தோல் நெல்லிமுள்ளி இவைகளைத் தூள் செய்து நீராரைக்கீரை, தண்ணீர்விட்டான் கிழங்கு, தாமரைக்கிழங்கு, பொன்னாங்கண்ணி இவைகளின் சாற்றில் அரைத்து இலந்தை விதை அளவு மாத்திரை உருட்டி, நிழலிலுலர்த்தி, வென்னீருடனோ, நெல்லிக்காய் சாற்றுடனோ, தேனுடனோ, கருப்பஞ்சாற்றுடனோ, இளநீருடனோ சாப்பிட நீர்ச்சுருக்கு விலகும்.

## மூத்ராதிஸாரத்தில்

சிறுபயறு, செம்பருத்திவேர் இவைகளின் கஷாயத்தைத் தேன் சேர்த்துச் சாப்பிட, மூத்திரம் அதிகமாகப் பெருகுவது நின்றுவிடும்.

மஞ்சள், நெல்லிக்காய், வட்டத்திருப்பி, பரச்சுண்டை வேர், விலாமுச்சம் வேர், சந்தனத்தூள், ஏகநாயகத்தின் வேர் இவைகளின் கஷாயத்தைத் தினம் சாப்பிட மூத்திராதிஸாரம் நிற்கும்.

வெளுத்த செம்பருத்திவேர், விருக்ஷிப்பூ புரசம்பட்டை, மகிழம் பழம், அத்தி இலை இவைகளில் ஒன்றை மோர் விட்டரைத்துக் குழப்பிச்சாப்பிட சீழ் முதலியவை கலந்து வெளியாகும். மூத்திரம் சுத்தி பெறும்.

# பிரயோகஸாரம்

## சில வைத்யப் பகுதிகள்

[பிரயோகஸாரம் என்ருெரு மந்திர நூல், ஏட்டுச் சுவடியாக உள்ளது. அச்சிலேருததது. அதில் சில வைத்தியப் பகுதிகளும் காணப்பெறுகின்றன. சில குறிப்பிட்ட நோய் நிலேகளில் மந்திர–தந்திர பிரயோகங்களுடன் வைத்தியமும் இடம்பெறுகிறது. அவைகளேப் பொறுக்கி எடுத்துத் தமிழாக்கி இங்கு தருகிருேம். மலட்டுத்தன்மையை நீக்கும் உபாயங்களில் ஆண்மையையும், பெண்மையையும் தனித்தனியே அதிகரிக்க முடியும் என்ற புதிய கருத்து இதில் குறிப்பிடத்தக்கது. ஆண் மகனே பிறக்கவேண்டுமென்ற நோக்கில் சில விசேஷ முறைகள் நூல்களில் காணப்பெறுகின்றன. பெண்ணே வேண்டுமென்ருல் அதில் பயன்தரக்கூடிய முறை இதில் காண்கிறது.]

## பிள்ளேப்பேறு பெற

இனி வம்சம் தொடரத் தேவையான சிகித்ஸையைக் கூறுகிறேன். இதற்கு ஆதாரமாயிருப்பவர் பெண்களானதாலே அவர்களிடத்தில் சில சிகித்ஸைகள் செய்யப்பெறவேண்டும்.

தைவத்தாலும் திரிதோஷங்களாலும் நவக்கிரஹ தோஷத்தாலும் பெண்கள் மலடிகளாகிருர்கள். அதனுல் ஒவ்வொரு மாதவிடாய் காலத்திலும் அவர்களேப் பரிசோதனே செய்ய வேண்டும்.

(1) மாதவிடாய் மாத்திரம் தோன்றுதல் (கருத்தரிப்பதில்லே) (2) கருத்தரித்துக் கலேந்துவிடுதல் (3) ஒரே ஒரு குழந்தை மாத்திரம் பெறுதல் (4) பிறந்து பிறந்து குழந்தை மரணமடைதல் என நான்கு தோஷங்களுண்டு. நான்காவதில் சரீர தோஷம், தைவ தோஷம், கிரஹ தோஷம் மூன்றும் சேரும்.

வாயு அதிகமாகக் கூடிய உணவையும் நடத்தைகளேயும் கொண்டவளுக்கு கர்ப்பாசயத்தில் வாயு அதிகமாகிக்கெட்டு, சத்தம் வலி நுரையுடன் மிக அளவில் குறைந்தும் வரண்டும் கருஞ்சிவப்பு நிறத்துடன் மாதவிடாய் வெளியாகும். குத்துவலி, ஜ்வரம், யோனி மென்மையற்றுத் தடித்து காணும்.

பித்தம் அதிகமாகக் கூடிய உணவு, நடை முதலியவைகளேக் கொண்டவளுக்குப் பித்தம் அதிகமாகிக் கெட்டு, நீலம், மஞ்சள் நிறத்துடன் கசிவு வெளியாகும். கசப்பு நெடி ஏற்படும். கர்ப்பா சயத்தில் வேக்காடு, எரிச்சல், ஜ்வரம், சூடு, இடுப்பு ஒடிவது போன்ற வேதனே ஏற்படும்.

கபமதிகமாகக்கூடிய உணவு, நடத்தை உள்ளவளுக்கு கபம் அதிகமாகிக் கெட்டு, அரிப்பும், சில்லிப்பும் ஏற்படும். வெளுத்த பிசிபிசிப்புடன் கூடிய கசிவு தோன்றும். மார்பில் வலி மற்ற கப நோய்கள் ஏற்படும்.

மூன்று தோஷங்களும் அதிகமாகக் கூடிய ஆஹார, விஹா ரங்கள் உள்ளவளுக்கு மூன்று தோஷ லக்ஷணங்களும் காணும். எரிச்சலுடன் அதிக அளவில் கருத்த நிறத்தில் உஷ்ணமாக மாத விடாய் வெளியாகும். ஒவ்வொரு உறுப்புகளிலும் வலி, மார்பு வலி, மார்பு கனத்திருத்தல் ஏற்படும்.

வாத யோனிக்கு ஸ்நேஹ ஸ்வேத பஸ்தி சிகித்ஸைகளும் பித்த யோனிக்கு சீதளமான ரக்த பித்த ஹர சிகித்ஸையும் கப யோனிக்கு ருக்ஷ உஷ்ண சிகித்ஸையும் செய்யவேண்டும். ஸந்நி பாதத்தில் தோஷச் சேர்க்கைக்கேற்ப சிகித்ஸை செய்ய வேண்டும்.

அந்த அந்த தோஷத்திற்கேற்ற தைலங்களில் நனேத்து துணியாலான பிசுவை யோனியில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒட்டு மாவேர் தேவதாரு, கண்டங்கத்திரி, செவதைவேர் இவைகளேப் பசுவின் பால் விட்டு மென்மையாக அரைத்து வாத யோனி தோஷமுள்ளவள் சாப்பிட யோனி சுத்தமாகும்.

அஸாரூன், நீலோத்பலக்கிழங்கு அதிமதுரம், கோஷ்டம், சந்தனம் இவைகளின் கல்கத்தைப் பாலுடன் சாப்பிட பித்த யோனி சுத்தமாகும்.

சிற்றுமுட்டிவேர், பேராமுட்டிவேர், குஸும்பா என்னு, எருக்கம் வேர், ஞாழல்பூ, சிறுநாகப்பூ இவை ஆட்டுப்பாலில் அரைத்துச் சாப்பிட யோனி சுத்தமாகும்.

அதிமதுரம், கோஷ்டம், நீலோத்பலக்கிழங்கு, சிற்றுமணக்கு வேர், செவதை வேர், வக்ராடவேர், சந்தனத்தூள் இவைகளை ஆட்டுப்பாலில் அரைத்துச் சாப்பிட யோனி சுத்தமாகும்.

இப்படி யோனி சுத்தி செய்த பிறகு, குழந்தை பிறப்பதற்காக சிறந்த ஒஷதியை நல்ல நாளில் சாப்பிடப் பலிக்கும்.

நறுதாளி, காட்டுப்பழுபாகல், வெள்ளெருக்கு, மலையகத்தி, வெள்ளைக்குந்துமணிவேர், அரசம்வேர், புல்லுருவி இவைகளில் ஒன்றை பாலுடன் சாப்பிட கருத்தரிக்கும். அரசம் வேரையும், புல்லுருவியையும் சேர்த்துச் சாப்பிடலாம்.

பொன்வாகைப்பூவையும், துளிரையும் பாலும் நெய்யும் சேர்த்துச் சாப்பிடக் கருத்தரிக்கும்.

நெய்ச்சட்டிப்பூண்டு, வில்வவேர், அரசம்மொக்கு இவைகளை முலைப்பாலுடன் சாப்பிடலாம். புஷ்ய நக்ஷத்திரத்தில் மணித் தக்காளி வேரை ஒரு கன்னிப் பெண்ணைக்கொண்டு அரைத்து பசு நெய்யுடன் குழப்பிச் சாப்பிடலாம்.

லோத்திரப்பட்டை, வில்வவேர், நெல்லிக்காய், ஆலம்விழுது, அரேணுகம் இவைகளைப் பாலில் கலந்து சாப்பிடலாம்.

சிற்றுமுட்டி, பேராமுட்டி இவைகளின் வேரை பாலுடன் சர்க்கரையும், நல்லெண்ணெயும் சேர்த்துச் சாப்பிட நல்லது.

அரசம்குருத்து, மூங்கில்குருத்து, தருப்பைநுனி, தண்ணீர் விட்டான்கிழங்கு, வில்வவேர், அருகம்பில் இவைகளைப் பாலுடன் சாப்பிடலாம்.

உளுந்தையும் கடுகையும் பாலில் அரைத்து நெய் சேர்த்துக் காலையில் சாப்பிட கருத்தரிப்பாள்.

அரிசிதிப்பிலி, இஞ்சி (சுக்கு) இவைகளைப் பால் விட்டரைத்து குங்குமப்பூ, இந்துப்பு நெய் சேர்த்துச் சாப்பிட கருத்தரிக்கும்.

அழிஞ்சிலின் வடக்கு நோக்கிச் செல்லும் வேரின்பட்டைத் தூள் 1 பங்கு, சர்க்கரை 3 பங்கு ஒரே நிறமுள்ள பசுவின் பாலிலிருந்து எடுத்த நெய் சேர்த்துச் சாப்பிட பிள்ளை பெறுவாள்.

எருக்கிலை, ஊமத்த இலை இவைகளைப் பாலில் ஆவியில் வேகவைத்து சாறு பிழிந்து பால் சேர்த்துச் சாப்பிடலாம். ஆலம் மொக்கு, வேப்பங் கொட்டை இவைகளைப் பால்விட்டு அரைத்துச் சாப்பிடலாம்.

புருஷவார தினத்தன்று உதயகாலத்தில் ஐந்து நாழிகை கழித்து, சீதேவிச் செங்கழணீர் கிழங்கையும், முடக்கித்தானையும் சேர்த்தரைத்து ஒரே மாட்டுப் பாலுடன் சாப்பிட்டு பால் அன்னம் மாத்திரம் சாப்பிட்டு, வெறும் கால்களால் பூமியைத் தொடாமல் மூன்று நாட்கள் இருக்க கருத்தரிக்கும்.

இந்த 21 யோகங்களும் அன்பார்ந்த கணவனை உடைய மங்கைக்கு ருதுகாலம் கழிந்ததும் முறைப்படி சாப்பிட பிள்ளை பேறு அளிக்கும்.

சுக்ரமதிகமானால் ஆணும், சோணிதமதிகமானால் பெண்ணும் இரண்டும் சமமானால் நபும்ஸகமும் பிறக்கும். ஆதலால் பிள்ளை அல்லது பெண வேண்டுமென்று நினைப்பவர்கள் தக்க சிகித்ஸை செய்துகொள்ள வேண்டும்.

சுக்லதாது அதிகமாக: (ஆண்கள் சாப்பிட) திராக்ஷை, ஸ்வர்ணமாஷிகம், (சுத்தி செய்தது) சிலாஜது, அயசூர்ணம் (சுத்தி செய்தது) புருவின் மலம், வாயுவிடங்கம், கடுக்காய் இவைகளை சம அளவு கலந்து இடித்து, இரும்பு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு நெய் சேர்த்துக் காலையில் சாப்பிட காந்தி, புஷ்டி, சுக்லம் அதிகமாகும். விஷம் பாண்டு நீங்கும். ஆட்டின் அண்டத்தையும் எள்ளுப்பொடியையும் பாலுடன் சேர்த்து 40 நாட்கள் காலையில் சாப்பிட சுக்கிலம் அதிகமாகும். திரிபலையை வெல்லம் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம் அல்லது பூனைக்காலி வேரை பாலுடன் சாப்பிடலாம். எள்ளுப்பொடி அரிசிமாவு அமுக்கராக் கிழங்கு, பால்முதுக்கன் கிழங்கு பூனைக்காலிவேர், இவைகளின் சூர்ணத்தைக்கொண்டு பாலில் கொழுக்கட்டை செய்து சாப்பிடலாம்.

சோணிததாது அதிகமாக: (மங்கையர் சாப்பிட) இலவன் பட்டையை இடித்துப் பிழிந்த சாறும், பாலும் சேர்த்து காய்ச்சித் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது. அதிமதுரத்தையும் திராக்ஷை

யையும் அரைத்து பாலிலோ காடியிலோ கரைத்துச் சாப்பிடலாம். அதிமதுரத்தையும் வாழைக் கிழங்கையும் (அல்லது வாழைப் பூவை) சூர்ணமாக்கி பாலுடன் சாப்பிடலாம். பயறை தோல் நீக்கி எடுத்துப் பொடித்து நெய் சேர்த்து சாப்பிட்டு, அனுபான மாகப் பால் சாப்பிடவும். மாம்பட்டையை இடித்துப் பிழிந்து சாறை மங்கையரின் மூக்கில் பிழிய ஸ்திரீபீஜம் பூர்ண உருப்பெறும்.

பஞ்சகவ்யகிருதம், பிராம்மீ கிருதம், வஜ்ரகிருதம் இவைகளை மங்கையர் சாப்பிட கர்ப்பதாரணம் ஏற்படும். கொம்பரக்கு கஷாயத்தில் தயாரான தைலம் ஸ்நானத்திற்கு உபயோகிக் கலாம்.

பஞ்சகவ்யகிருதம் : கோரைக்கிழங்கு, ஏலரிசி, கொடிவேலி. வேர்ப்பட்டை, வாய்விடங்கம். அதிமதுரம் மஞ்சள். மஞ்சிட்டி, வட்டத்திருப்பி, வசம்பு, திப்பிலி, கடுகரோஹிணீ, திரிபலை, ஆடாதோடை, திராக்ஷை, மரமஞ்சள் இவைகளைக் கல்கமாக்கி பால்சேர்த்து நெய்காய்ச்சிச் சாப்பிட பிரேதபாதை கிரஹபாதை நீங்கி மன அமைதி பெற்று நீண்ட ஆயுளுள்ள பிள்ளையைப் பெறுவாள்.

பிராம்மீ இருதம் : செவதைவேர், வாய்விடங்கம், திரிபலை, சுக்கு, சாக்கொன்னைப்பட்டை, இந்துப்பு, திப்பிலி இவைகளைக் கல்கமாக்கி, வல்லாரை (பிரம்மி) சாறு சேர்த்துக் காய்ச்சின நெய் பூத பாதையைப்போக்கி, பிள்ளைப்பேறளிக்கும்.

வஜ்ர இருதம்: அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்ரு முட்டி, திரிபலை, மஞ்சள், திராக்ஷை, வசம்பு, நன்னாரி பிராம்மி (வல்லாரை), வாயுவிடங்கம், மாதுளைப்பட்டை, ஆடாதோடை வேர், மஞ்சட்டி வட்டத்திருப்பி, சீந்தில் கொடி மரமஞ்சள், வேப்பம்பட்டை, கோரைக்கிழங்கு, இவைகளைக் கல்கமாக்கி, புத்திரன்சீவி செடியை ஸமூலம் இடித்துப் பிழிந்த சாற்றுடனும் சேர்த்துத்தயாரித்த நெய் பிள்ளைப் பேறளிக்கும்.

லாக்ஷாதைலம் : மரமஞ்சள், முள்ளங்கிவிதை, சந்தனக் கட்டை, கோரைக்கிழங்கு, கோஷ்டம், சித்தரத்தை, அமுக்கராக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, அரேணுகம், கடுகரோஹிணீ இவைகளைக் கல்கமாக்கி நல்லெண்ணெய் 1 பங்கு, தயிர்த்தெளிவு 4 பங்கு கொம்பரக்கு திரவம் 1 பங்கு, இவைகளைக் சேர்த்துக் காய்ச்சிய தைலம், கிரக பீடை, ஜ்வரம் நீக்கி, ஸௌபாக்யத்தைக் கொடுக்கும்.

இவ்விதம் பலவிதமான முயற்சிகளினால் கருத்தரிக்கச் செய்த பின் கர்ப்பராக்ஷைக்கான உபாயங்களைக் கையாளவேண்டும்.

---

# சில அனுபவ முறைகள்

## சுவாஸ காஸத்தில்

ஸோம யோகம்: ஸோமலதையை 10 கிராம் அளவு இடித்து 500 கிராம் ஜலத்திலிட்டு கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு வடி கட்டி, சர்க்கரை அல்லது இந்துப்பு சேர்த்துச் சாப்பிட ஒரு வாரத்தில் நாட்பட்ட இளைப்பு, இழுப்பு, கபம் கட்டுதல் குறைந்துவிடும். ஸோமலதை என்பது Ephedra Vulgaris என்ற கொடி எங்கும் கிடைக்கும். இதன் சத்துதான் Ephedrine எனும் பிரஸித்த மருந்து.

மல்ல யோகம்: சுத்தி செய்த வெள்ளைப் பாஷாணம் 2 யவ அளவு எடுத்து, நல்ல மூங்கிலுப்பு 32 யவ அளவு சேர்த்து 6 மணி நேரம் நன்கு அரைத்துக் கலந்து 16 பொட்டணம் செய்து தினம் காலையில் நெய், பால் அல்லது வெண்ணெய்யுடன் சாப்பிட 16 தினங்களில் சுவாஸ காஸம் குணமாகும். Eosinophilis என்ற வெள்ளை அணு ரத்தத்தில் அதிகமாவதால் ஏற்படும் சுவாஸத்தில் இது நல்லது.

அபாமார்க பீஜயோகம்: நாயுருவி விதையை 3–6 கிராம் அளவு அரைத்துப் பாலில் கலக்கி (பாதாம்கீர் போல்) கீர் தயார் செய்து அதை ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பௌர்ணமியில் வெட்ட வெளியில் இரவு முழுவதும் நிலவில் வைத்திருந்து மறு நாள் காலை சாப்பிட நல்லது. சித்ரகூடம் முதலிய இடங்களில் இருந்து பைராகி மருந்தாகப் பெறுவது இதுவே.

பிப்பல்யாதி வடி: திப்பிலி, வெங்காரம் பொரித்தது, கழற்சி விதை, வெள்ளைக் கத்தக்காம்பு, கண்டங்கத்திரி விதை, மிளகு இவை வகைக்கு 20 கிராம், அபின் 10 கிராம் இவைகளை இஞ்சிச் சாறு விட்டரைத்து பயறளவு மாத்திரை செய்து சாப்பிட வாயு கபம் காரணமாக ஏற்படும் சுவாஸ காஸத்தில் நல்ல குணம் அளிக்கும்.

ஹிங்குல யோகம்: சுத்த லிங்கத்தை ஒரு வாரம் வரை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து கடுகளவு மாத்திரை செய்து 2–4 மாத்திரை சுக்கு கஷாயத்துடன் சாப்பிட நல்லது. ஆஸ்துமா நிமோனியா இன்ப்ளூயன்ஸா போன்ற வாதகப ஜ்வரங்களைப் போக்க நல்லது.

ச்வாஸரிபு : சுத்த லிங்கம் 60 கிராம், சேங்கொட்டை 200 கிராம், தேன் 200 கிராம், சிற்றுமணக்கெண்ணெய் 200 கிராம் இரும்புச் சட்டியில் கீழே சேங்கொட்டையைப் பரப்பி, மேலே லிங்கக்கட்டியை 10 கிராமிற்கு மேற்படாத அளவில் தனித் தனியே வைத்து தேன் விட்டு அடுப்பிலேற்றி எரிக்கவும் தேன் எரிந்ததும சிற்றுமணக்கெண்ணெய்யையும் விட்டு எல்லாம் எரிந்ததும், கீழிறக்கி லிங்கத்தைத் தனியே எடுத்து கத்தியால் சுரண்டிப் பிறகு அரைத்து வைத்துக்கொள்ளவும் 2-4 யவ அளவு தேனில் கொடுக்கலாம். சேங்கொட்டை புகை கேடு விளைவிக்கக் கூடுமாதலால், தூரவிருந்து புகை மேல்படாது காரியங்களை கவனிப்பது அவசியம்.

மல்ல ஸிந்தூரம் : அசல் சங்க பாஷாணம் 10 கிராம் நிறை யுள்ளதாக எடுத்துக்கொள்ளவும். அசல் சங்க பாஷாணம் என் பதன் அடையாளம் கருநிறம் கலந்து மேக நிறத்தில் காணப் படுவதே கல்வத்திலிட்டரைக்க அதே நிறம் இருக்கும். அழுக்குத் துணியில் தடவ தங்க நிறம் இருக்கும். இதை மலை வேப்பிலை யைக் கல்கமாக அரைத்து 1600 கிராம் எடையுள்ள அதனுள் வைத்து மேல் 14 சீலை மண் செய்து காயவைக்கவேண்டும். அதை பானையினுள் வைத்து மூடி மறுபடியும் 14 சீலை மண் செய்யவும். பானையைக் கம்பிகொண்டு 4 பக்கமும் கட்டி விடவும். நன்கு காய்ந்த பின் ஒரு கஜபுடம் போடவும். ஆறின பின், அந்த சட்டி யில் மிகச் சிறிய மூன்று துவாரங்கள் போடவும். காற்று உள்புகக் கூடாதவாறு துவாரமிடவேண்டும். ஐந்து தினங்கள் கழித்து அதைத் திறந்து பார்க்க உள்ளே ஸிந்தூரமிருக்கும். $\frac{1}{4}$–$\frac{1}{2}$ அரிசி எடை தேன் வெண்ணெய், அனுபானத்துடன் கொடுக்க ஸந்நி பாதம், நிமோனியா ஸந்நிபாதம், கபபிரகோபம், வயதானதால் ஏற்படும் பலவீனம், இந்திரிய துர்பலம் முதலியவைகளில் நல்ல குணமளிக்கும்.

டங்கணஸைந்தவ யோகம்: வெங்காரத்தையும் இந்துப்பையும் ஸம அளவில் மட்பானையிலிட்டு பொரித்தெடுத்துக்கொள்ளவும்- 4–8 யவ அளவு வெற்றிலையில் மடித்துக் கொடுக்க வரட்டு இருமல், ச்வாஸம் இவைகளில் நல்ல குணம் தரும்.

தூமயோகங்கள் : இலந்தை இலையின் மேல் மனோசிலையை ஜலத்தில் அரைத்துப் பூசி காய வைத்து, அதை பீடியாக சுற்றிக் கொண்டு புகை இழுக்க உடன் சுவாஸம் குறையும். ஆடாதோடை இலை, ஊமத்தை இலை, ஊமத்தை விதை, காஞ்சூரி இலை இவை களை நிழலிலுலர்த்தி பீடி செய்து புகை இழுக்கலாம்.

ச்வாஸதமனம்: யவச்சாரம், எருக்க க்ஷாரம், நாயுருவி க்ஷாரம், அப்பளக்காரம், புளி க்ஷாரம் இவை வகைக்கு 3 கிராம் சர்க்கரை, பொரித்த படிக்காரம், பொரித்த வெண்காரம் வகைக்கு 3 கிராம் இவைகளைத் தூள் செய்து அரைத்து வைத்துக்கொள்ளவும். 6 யவ அளவில், தேவைக்கேற்ப இஞ்சிச் சாறும் தேனும் சேர்த்துக் கொடுக்க பழைய சுவாஸ ரோகமும் தீரும். எல்லாவித இருமலும் நிற்கும்

ச்வாஸதளன ரஸம்: கிராம்பு ஜாதிக்காய், சிறுநாகப்பூ புஷ்கர மூலம், காய்பல், திப்பிலி, சுக்கு, அரசங் கோந்து, லிங்கம், சுத்த ஊமத்தை விதை இவைகளை இடித்துத் தூள் செய்து ஊமத்தம் பூவின் சாற்றில் ஏழு பாவனையும், ஆடாதோடை, இஞ்சி, வெற்றிலை இவைகளின் சாற்றில் இரண்டிரண்டு பாவனையும் செய்து 4 யவ அளவில் மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தவும். சுவாஸம்—காஸம் கபபிரகோபத்தில் ஒவ்வொரு மாத்திரை தேன் இஞ்சிச் சாறு சேர்த்து சாப்பிடலாம்.

ஸோமயோகம்: ஸோமலதையைத் தூள் செய்து அதில் 20-ல் ஒரு பங்கு ரஸ ஸிந்தூரம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். 6—12 யவ அளவு தேனில் சாப்பிட அப்பிரக பஸ்மம், சந்திராமிருதரஸம், பாகோத்தரவடி இவைகளுடன் கலந்து சாப்பிட சுவாஸத்தில் நல்லது.

சுவாஸாந்தக வடி: சுத்த ஊமத்தை விதை, சுத்த வத்ஸநாபி, சுத்த எட்டி விதை, மிளகு, அபின் இவைகளை ஸம பாகம் எடுத்து கம்மாறு வெற்றிலைச் சாற்றில் அரைத்து 2—2 யவ அளவில் மாத்திரை உருட்டிக்கொள்ளவும். 1—1 மாத்திரை ஜலம் அல்லது பாலுடன் சாப்பிட நல்ல குணம் தரும்.

பாரங்கியாதி கஷாயம்: சிறுதேக்கு, வசம்பு, எருக்கம் வேர், கடுக்காய், மஞ்சள், ஆடாதோடை, சீந்திற்கொடி, சுக்கு, கொத்துமல்லி விதை இவைகளைச் சமனெடை எடுத்துக் கஷாயமிட்டுத் தனியாகவும் மற்றமருந்துகளின் அனுபானமாகவும் கொடுக்கலாம்.

விபீதகாதி கஷாயம்: தானிக்காய், எருக்கம் வேர், கொடிவேலி வேர், சுக்கு, சிறுதேக்கு, திப்பிலி, கடுக்காய், கோரைக் கிழங்கு இவைகளின் கஷாயத்தை சுவாஸம், காஸம், வாந்தி, விக்கல் நோய்களில் கொடுக்கலாம்.

தொடர்ந்து கொடுக்கக்கூடிய சில ரஸயோகக் கலவைகள்: (1) வங்கபஸ்மம், அப்ரக பஸ்மம், ஸமீர பன்னக ரஸம், சுவாஸ குடார ரஸம் இவைகளைச் சேர்த்துக்கொடுப்பது. (2) மல்ல ஸிந்தூரம், அப்பிரக பஸ்மம், சிருங்க பஸ்மம் இவைகளை திப்பிலி சூர்ணத்துடன் கொடுப்பது — இவ்விரண்டும் வியாதி வராமல் தடுக்க நல்ல முறைகள்.

# அஜீரணத்திலும் அக்னி மந்தத்திலும்

ஷித்த பாஸ்கர சூர்ணம் : சுக்கு, மிளகு, சிறுநாகப்பூ, புளி வஞ்சி, லவங்கப்பட்டை, தாளிஸபத்திரி, ஏலரிசி, கருஞ்சீரகம் இவை வகைக்கு 10 தோலா, திப்பிலி 15 தோலா, கண்டதிப்பிலி 20 தோலா, கொத்துமல்லி விதை 25 தோலா, கரியுப்பு 25 தோலா, கடல் உப்பு 40 தோலா, மாதுளம் விதை 25 தோலா இவைகளை இடித்துத் தூள் செய்து கொள்ளவும்

$\frac{1}{4}$ தோலா அளவில் காலையிலும் இரவு படுக்கு முன்னரும், வென்னீர், மோர், ஆரஞ்சுப்பழ ரஸம், எலுமிச்சம்பழ ரஸம் இவைகளில் ஒன்றுடன் சாப்பிட பலவிதமான அஜீர்ணம், அக்னி மந்தம், வலி, கிரகணி இவைகளில் நல்ல குணம் தரும்.

உதராமிருதம் : இந்துப்பு 10 தோலா, நவச்சாரம், வெடியுப்பு, கந்தக வெடியுப்பு, மிளகு வகைக்கு 5 தோலா, ஓமம், ஜீரகம், திப்பிலி, எலுமிச்சம்பழ உப்பு வகைக்கு $2\frac{1}{2}$ தோலா பொரித்த பெருங்காயம் $\frac{1}{2}$ தோலா, மெந்தால் கர்பூரம் வகைக்கு கால் தோலா நிறமாறுதலுக்குத் தேவையான அளவு பூங்காவி இவைகளைத் தூள் செய்து 15 – 22 யவ அளவு வென்னீருடன் சாப்பிடலாம் அஜீர்ணம் வயிறு உப்புசம், மலக்கட்டு கல்லீரல் மண்ணீரல் பெருக்கம், காலரா, வாந்தி, வயிற்றுப் பிரட்டல் முதலிய எல்லாவித வயிற்று நோய்களிலும் கைகண்ட மருந்து.

அஷ்டாமிருதம் : நவச்சாரம், மிளகு, கரியுப்பு, ஏலரிசி வகைக்கு 5 தோலா, சர்க்கரை 20 தோலா, கர்பூரம், மெந்தால், தைமால் வகைக்கு கால் தோலா, சிறிதளவு பூங்காவி இவைகளைத் தூள் செய்து கொள்ளவும். வயிற்று நோய்கள் எல்லாவற்றிற்கும் 5 – 10 யவ அளவு கொடுக்க காலரா, வயிற்றுப் பிரட்டல், வாந்தி, கல்லீரல் மண்ணீரல் பெருக்கம் இவைகளில் மிகவும் நல்ல குணம் தரும்.

க்ஷுதாஸாகரம் : சுக்கு, வெடியுப்பு, நவச்சாரம், கந்தக வெடியுப்பு, மிளகு இவை வகைக்கு 2 தோலா, இந்துப்பு 4 தோலா, ஓமம் ஒரு தோலா, எலுமிச்சம்பழ உப்பு ஒரு தோலா இவைகளை நன்கு தூள் செய்து 15 யவ அளவில் வென்னீரில் 2 தடவை கொடுக்க பசி தூண்டப்படும். அஜீர்ணம், பசியின்மை போகும். வயிற்று வலியும் நிற்கும் மற்றொரு முறை : நவச்சாரம், மிளகு வகைக்கு $2\frac{1}{2}$ தோலா, இந்துப்பு 1 தோலா, பெருங்காயம் $\frac{1}{2}$ தோலா, மெந்தால் $\frac{1}{4}$ தோலா, எலுமிச்சம்பழ உப்பு ஒரு தோலா இவைகளைத் தூள் செய்து கொள்ளவும். சாப்பிட்டவுடன் $\frac{1}{8}$ தோலா வரை சாப்பிட பசியும் சீரடைந்து அக்னிமந்தம், அஜீர்ணம், மலக்கட்டு, வயிற்றுப்புசம் இவை குறையும்.

வந்ஹிவடீ: திப்பிலி 15 தோலா, ஸௌவர்சலே உப்பு 15 தோலா, கடுக்காய் பிஞ்சு 12 தோலா, ஓமம் 12 தோலா இவைகளைத் தூள் செய்து ஜலம் விட்டு 8 மணி நேரம் கொதிக்கவைத்து கெட்டியாகி ஆறினவுடன் 8 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். காலே மாலே ஒரு மாத்திரை சாப்பிட்டு வர அஜீரணம், அரோசகம், வயிற்று வலி இவை நிச்சயமாகத் தணியும்.

ஜகத் பாஸ்கர சூர்ணம்: சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டந் திப்பிலி, கொடிவேலிவேர் பட்டை, செவ்வியம், லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, ஜீரகம், கருஞ்சீரகம், மல்லி விதை, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம் வகைக்கு 3 தோலா, ஸௌவர்சலே உப்பு 5 தோலா, புளிவஞ்சி 6 தோலா, ஓமம், இந்துப்பு, நெய்யில் வருத்த பிஞ்சுக் கடுக்காய், பொரித்த பெருங்காயம் வகைக்கு $6\frac{1}{2}$ தோலா இவைகளை இடித்துத் தூள் செய்துகொள்ளவும். சாப்பாட்டிற்குப் பின் 15 யவ அளவு சாப்பிட அஜீர்ணம், வயறு உப்புசம் வலி குறையும்.

மற்றொரு முறை: ஓமம், பேரேலம், மிளகு, சுக்கு இந்த நான்கையும் சமஅளவு எடுத்துத் தூள் செய்து 15–30 யவ அளவு சாப்பிட வாயுவால் ஏற்பட்ட வயிற்றுவலி நீங்கும்.

மற்றொரு முறை: ஓமம், ஆளி விதை, வெந்தயம், இந்துப்பு இவைகளை இடித்து வைத்துக்கொண்டு இரவு படுக்கு முன் வென்னீருடன் சாப்பிட வாத வியாதிகள், சுவாஸம், மல பந்தம் இவை நீங்கும்.

ஸ்வாதிஷ்ட சூர்ணம்: எலுமிச்சம்பழ உப்பு அரை தோலா ஓமம் ஒரு தோலா, யவச்சாரம் $\frac{1}{2}$ தோலா, ஜீரகம் 2 தோலா, கொடிவேலி வேர்ப்பட்டை 1 தோலா, மல்லிவிதை, 2 தோலா, திப்பிலி $\frac{1}{2}$ தோலா, பிஞ்சுக் கடுக்காய் 3 தோலா, அக்கரகாரம் 1 தோலா, சூரத்தாவாரை 4 தோலா, இந்துப்பு 6 தோலா, மாதுளம் வித்து 11 தோலா, ஸௌவர்சலே உப்பு 3 தோலா, போஸ்து ஸௌமாக் (யூனனி) ஒரு தோலா இவைகளைத் தூள் செய்துகொள்ளவும். $\frac{1}{4}$–$\frac{1}{2}$ தோலா வீதம் சாப்பிட பசியைத் தூண்டி ஜீர்ணசக்தியை அதிகரிக்கச் செய்யும்.

மஹாஸ்வாதிஷ்ட பாசக சூரணம்: ஏலரிசி 3 தோலா, ஜீரகம் 3 தோலா, மாதுளம் வித்து 3 தோலா, லாஹூர் உப்பு 3 தோலா, திப்பிலி 3 தோலா, புளிய க்ஷாரம் 3 தோலா, சர்க்கரை 30 தோலா இவைகளைத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும். பசிக்குறைவு, வாந்தி, வயிற்றுக் குமட்டல் இவை நீங்க மிக உபயோகமுள்ளது.

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.


இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

**தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:
4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி விதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



mea/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)


Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press Tiruchirapalli-2.